377

17—1—1965-ல்

திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த

தமிழக இந்தி எதிர்ப்பு மாநாட்டில்

வரவேற்புக் குழுவின் தலைவர்

திரு. ஜி. டி. நாயுடு

அவர்கள் ஆற்றிய

வரவேற்புரை.

★

17—1—1965-ல் திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த

தமிழக இந்தி எதிர்ப்பு மாநாட்டில்

வரவேற்புக் குழுவின் தலைவர்

திரு. ஜி. டி. நாயுடு அவர்கள்

ஆற்றிய வரவேற்புரை

அன்புள்ள நண்பர்களே! தமிழக மக்கள் சார்பில் வரலாற்றுப் பெருமை மிக்க திருச்சிமா நகரத்திலுள்ள பெயர் பெற்ற தேவர் மன்றத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு நிகழ்கின்றது. முதலில் இம் மாநாடு நிகழ்தற்குக் காரணமாயிருந்து பெருந் தொண்டு புரிந்துவரும் முத்தமிழ்க் காவலர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதமவர்கட்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றது. அவர் தமிழுக்காகத் தொடர்ந்து பல வகையில் நன்கு செய்துவரும் தொண்டு போற்றற்பாலது. தமிழகப் புலவர் குழு அமைத்துத் தமிழகத்திலுள்ள மாவட்டத் தலைநகரங்களிலெல்லாம் ஆண்டுதோறும் மூன்று முறை கூடித் தமிழ்த்தொடர்பான நடை முறைக்கு வேண்டிய செயல்திறங்களை ஆராய்ந்து அரசியலாருக்கும், தமிழக மக்களுக்கும் தொடர்ந்து எடுத்துக்காட்டி வருகின்றார்கள். தமிழ் மூலிகை களின் இயல்பறிந்து உபயோகப்படுத்தும் முறை யினைப் புத்தகமாக எளிய தமிழில் எல்லோரும் அறியும் வகையில் வெளியிட்டும், தானும் அந்த மூலிகை மருந்துகளை வருகின்றவர்களெல்லோருக்கும் கொடுத்தும், இங்கிலீஷ் மருந்துகளுக்காக விரய மாகும் செலவைத் தவிர்த்தும் வருகின்றார். இச் சமயத்தில் இன்னொன்றையும் நினைவு படுத்த விரும்பு கின்றேன். தமிழகத்திலுள்ள ரேடியோ நிலையத்

திற்கு வானொலியென முன்பிருந்த பெயரை மாற்றி ஆகாசவாணியெனப் பிடிவாதமாகக் கூற முயன்ற அரசாங்கத்தாரை வானொலி என்ற தமிழ்ப் பெயரைச் சொல்லும்படிச் செய்தவரும் இவரே. தென்னகத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இம் மாநாட்டைக் கூட்டித் தக்க காலத்தில் இவர் செய்துவரும் தொண்டுக்குத் தமிழக மட்டுமன்றித் தென்னாடு முழுமையும் கடமைப்பட்டிருக்கின்றது.

இவையன்றியும் இவர் செய்துள்ள தொண்டுகள் பற்றிச் சொல்லுவதென்றால் காலம் அதிகமாவதோடு அவர்கள் முன்னிலையில் கூறுவதற்குக் கூச்சமாகவும் அவர்களுக்குச் சகிக்க முடியாமலும் இருக்கும். ஆயினும் இங்குக் கூடியுள்ள மக்கள் அறியும் பொருட்டு இவர்களைப் பற்றியும் இங்கு பங்கெடுத்துக் கொள்ளும் பெரியவர்கள் பற்றியும் சில சொல்லுகின்றேன்.

இம் மாநாட்டில் பங்குகொள்ளும் உங்களையெல்லாம் வரவேற்கும் வரவேற்புக் குழுத் தலைவன் என்ற முறையில் இன்றைய மத்திய அரசாங்கத்தின் இந்தி மொழி பற்றியும் பிற செய்திகள் பற்றியுமான நடைமுறைகளை உங்கள்முன் கூற வாய்ப்புக் கிடைத்தது குறித்து மகிழ்கின்றேன்.

இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் பெரியவர்கள் எல்லோரும் இம்மாநிலத்தவராயினும், அனைத்திந்தியாவிலும், உலகின் எல்லாப் பகுதிகளிலும் அறிமுகமானவர்கள். மக்கள் நலம்பெற வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு கட்சிகளைத் தோற்றுவித்தும், முன்புள்ள கட்சிகளில் சார்ந்து நின்றும் தொண்டு செய்து வருபவர்கள்.

இவர்களில் இம் மாநாட்டில் தலைமை ஏற்கும் திரு டாக்டர் சர் P. T. இராசன் அவர்கள் நம் எல்லோருடைய மதிப்பிற்கும் உரியவர்கள். அரை நூற்றுண்டாக இந்திய நாட்டின் அரசியல் வாழ்வொடு தொடர்புடையவர்கள். நடு நிலைமையும் கூரிய அறிவும் கூடிய இவரது அரசியல் வாழ்வால் மிக்க புகழுடையவர். இத்தகைய பெரியவர் இம்மாநாட்டில் தலைமை தாங்கிச் சிறப்பிக்கின்றமை குறித்து உங்கள் எல்லோருடைய சார்பிலும் என்னுடைய சார்பிலும் முதலில் வரவேற்புக் கூறுகின்றேன்.

அடுத்து விழாவில் கொடியேற்றிச் சிறப்பிக்க இங்குப் போந்திருக்கும் நண்பர் திரு கருமுத்து, தியாகராசச் செட்டியாரவர்கள் இந்நாடும் எந்நாடும் அறியும் புகழுடையவர்கள். தென்னிந்தியாவில் முன்னணியில் உள்ள பெரிய பல தொழில் நிறுவனங்களைத் தோற்றுவித்தவர். பதினைந்துக்கும் மேற்பட்ட நூற்பு ஆலைகள் இன்னும் பல பிற தொழில் நிறுவனங்கள், அவைகளில் தொழில் புரியும் இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஆயவற்றின் ஒப்பற்ற நிறுவனராகவும் பாதுகாப்பாளராகவும் விளங்குகின்றார்கள். சங்கம் வைத்துத் தமிழறிவூட்டிய பாண்டிய மன்னர்கட்குப் பிறகு, தாய்மொழி மூலமும், பிற மொழி மூலமும் தமிழ் நாட்டு மக்களுக்கு வாழ்வியலறிவும் தொழிலியலறிவும் உண்டாகத் தியாகராசர் கலைக்கல்லூரி, தியாகராசர் பொறியியற் கல்லூரி (Arts and Engineering Colleges) சேலத்தில் ஒரு பொறியியல் தொழிற் கல்லூரி இவையன்றியும் பயிற்சிப்பள்ளி முதலான பல பள்ளிகளைத் தோற்றுவித்து நடத்தி வருகின்றார்.

'தமிழ் நாடு' என்ற நாளிதழைத் தொடங்கித் திறம்பட நடத்தி வருகின்றார்கள். (Daily paper). தமிழ் மொழி பற்றியும் தமிழ்நாட்டின் நல்வாழ்வு பற்றியும் இச்செய்தித்தாள் அக்கறைகாட்டி வருவது குறிப்பிடத்தகுந்தது.

செல்வமுடைய பலரைப்போலச் செல்வத்தை மக்கட்குப் பயன்படாது முடக்கி வைக்காமலும், இவர் எவ்வளவு சம்பாதித்தாலும் தங்கமாகவோ வெள்ளியாகவோ கரன்சி நோட்டுகளாகவோ சாப்பிடாமலும், நம்மைப்போலவே எளிய உணவுண்டு மீண்டும் பல தொழில் நிறுவனங்களைத் தோற்று வித்தலில் முதலீடு செய்து நாட்டிற்கும் மக்களுக்கும் பழுமரம் போலப் பயன்பட அவரும் அவர் குடும்பத் தினரும் தூங்கும் நேரம் தவிர- ஒவ்வொரு கணமும் பாடுபட்டு வருகின்றனர். இத்தகைய பெரியவர் நம் மாநாட்டில் கலந்து கொண்டு கொடியேற்றிச் சிறப்பிக்கவிருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும். அவர்களை வருகவென வரவேற்கின்றேன்.

மாநாட்டைத் தொடங்கி வைக்க வந்திருக்கும் திரு. சி. இராசகோபாலாச்சாரி யாரவர்களின் தொடர்பு இம்மாநாட்டிற்குக் கிடைத்தது நமக்கெல் லாம் மிகுதியும் மகிழ்ச்சிக்குரிய நன்கொடையாகும். அவரைப்பற்றி நன்கறிந்துள்ள உங்கள் எல்லோ ருடைய முன்னிலையில் நான் கூறுவது மிகையாகும். இவருடைய அரசியலோடு தொடர்பான செயல் முறைகள் பொதுவாக இந்திய நாட்டிற்கும் சிறப் பாகத் தமிழகத்திற்கும் குறிப்பிடத் தகுந்தவை யாகும். இவர் நம் மிந்திய நாட்டின் முதல் கவர்னர் சௌரலாகப் பொறுப்பேற்றுச் சிறப்பித்தவர். வங்காளநாட்டின் கவர்னராகவும் சில ஆண்டுகள் இருந்துள்ளார்கள். நம்முடைய தென்னாடுகளின்

தலை நகரமாகச் சிறந்து விளங்கிய சென்னைமாநிலத்தின் முதலமைச்சராகவும், மொழி வழிப்பிரிந்த பிறகு எஞ்சியுள்ள தமிழகத்தின் முதன் மந்திரியாகவும் இவர்கள் இருந்து மிகவும் சிறந்த தொண்டுகளைச் செய்துள்ளார்கள். இந்தியாவிலேயே சென்னைமாநிலத்தின் ஆட்சி முறை சிறந்து விளங்குவதற்கு அடிகோலியவரும், ஆட்சி முறையை உருவாக்கியவரும் இவரேயாவர். இந்து முசுலீம் ஒற்றுமைக்காக அனைத்திந்திய அளவில் தக்க நெறியினை வகுத்தவரும் இவரே. முற்றுவிக்க முடியாத எத்தகைய அரசியல் சிக்கல்களையும் எளிதில் தீர்த்து வைக்கும் கூரிய அறிவு படைத்தவர். இவர் உலகறிந்த ராசதந்திரியாவார். பலவகையான திறமைகளையுடைய அரசியல் ஞானி. இவர் முதன் மந்திரியாக இருந்த போது நம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து இவருடன் உரையாடியிருக்கின்றேன்.

இப்பொழுது இந்தியா முழுவதிலுமுள்ள மக்கள் நன்கறியும்படியான லாரிகளும் இங்கு எல்லா ரோடுகளிலும் ஓடுகின்ற டாடா மெர்சிடஸ் பென்ஸ் பஸ்களுமாகவுள்ள இந்த மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை இங்கு நிறுவுவதற்கு அடிகோலியவர் இவரே யாகும். இது தொடர்பாக நான் பேசப்போனதை இவர் ஒரு சமயம் மறந்திருக்கலாம். இவர் சட்ட மன்றத்தில் பேசவேண்டியதற்குக் காலம் குறிப்பிட்டிருந்தும் அதனைத் தள்ளிவைத்து இச்செய்தியை டாக்டர் திரு. சுப்பராயனையும் அழைத்து முடிவு செய்து தொழிற்சாலையைத் தோற்றுவித்தற்குக் காரணமாயிருந்தார். ஆனால் வேறு பல காரணங்களால் அது வடக்கில் நிறுவும்படியாக ஆயிற்று. அவைகளை விவரித்து இங்கு பேசக் காலமில்லை.

இவர் எச்செய்திகளையும் விரைவாகப் புரிந்து கொள்ளும் கூரிய மதி படைத்தவர். இவர் இந்திய நாட்டின் கவர்னர் செனரலாக இருந்தபோது வடக்கிலுள்ளவர்கள் தெற்கு வடக்கெனப் பேசிய செய்திகளைப் பத்திரிகையில் கண்டு மனம் வருந்தி இவர்கட்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினேன். அதில் நீங்கள் அங்குள்ள நம்மவர்களை அழைத்துக் கொண்டு இங்கு வந்து விடுங்களென எழுதினேன். அதற்கு அவர்கள் சுருக்கமாக ஒரே வரியில் "இது தகுந்த சமயமல்ல" என்று எழுதினர்கள். இவர்கள் இப்போது இந்தி மொழி பற்றியும் பிற செய்திகள் குறித்தும் கூறும் அறிவுரையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, வரவிருக்கும் பெரிய ஆபத்தைத் தடுத்துக் கொள்ளத் தவறினல் இவர் எதிர்பார்த்த "தக்க சமயத்தை" அரசாங்கமே உண்டாக்கிக் கொடுத்த தாகுமெனக் கூறுகின்றேன்.

இவரைப் பற்றி நாம் எவ்வளவு கூறினுலும் முகமனுகவோ மிகைப்படுத்திக் கூறியதாகவோ ஆகாது. இந்நாட்டில் முதன் முதல் கள்ளுக்கடை சாராயக் கடைகளைத் தைரியமாக எடுத்துவிட்டு மற்ற நாட்டிற்கும் வழிகாட்டியவர் இவரேயாவார். இவர் மற்றவர் எதிர்ப்புக்கு அஞ்சாதவர்; பாராட்டுதலுக் கும் மகிழாதவர். பயனைக் கருதாது செயல் புரிவதில் கண்ணுங் கருத்துமாக இருப்பவர். இதற்குச் சான்ருக ஒன்றைக் கூறலாம். இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு உணவுப் பொருள்கள் மீதிருந்த கட்டுப்பாடுகளை உடனடியாக எடுத்துவிட்டார். லஞ்சமும் கறுப்புப் பணமும் பெருகுவதற்கு மூல மாக இருப்பது கட்டுப்பாடும் அதிக வரிப்பளுவும் என்பதை இவரைப்போல நன்குணர்ந்தவர் இந்தியா வில் யாருமில்லை.

இப்போது காங்கிரசு இயக்கத்தினின்றும் விலகி 'சுதந்திரக்கட்சி' யைத் தோற்றுவித்துள்ளார். சுதந்திரக்கட்சியினருக்கு இவருடைய தலைமை கிடைத்தற்கரிய பேருகும். இவருடைய பல ஆண்டு களின் அநுபவத்தைக்கொண்டு நாட்டின் எதிர் காலத்தைப்பற்றியும், காங்கிரசின் எதிர்காலம் பற்றி யும் சோசியம் சொல்லமுடியும். எனக்குச் சோசியத் தில் நம்பிக்கை யில்லை. ஆனால் இவர் கூறும் அநுபவ சோசியம் பலிக்குமென நம்புகின்றேன். முன் கூட்டியே நிகழுமென இவர் கூறியது நிகழக்காணு கின்றேன். இவர் இப்போது அறிவுரை கூற வந்திருப்பது எனக்கோ உங்களுக்கோ அல்ல. ஆனால் இந்நாட்டில் இப்போது அமைந்துள்ள நன்ருக ஆளும் திறமையற்ற அரசாங்கத்திற்குக் கொடுக்கும் வெகுமானமாகும். மிக்க மகிழ்வோடு இவர்களை உங்கள் சார்பிலும் என்னுடைய சார்பிலும் வரவேற்கின்றேன்.

நாம் தமிழர் கட்சியைத் தோற்றுவித்தவரும், அதன் தலைவரும், சிறந்த தொழிலதிபரும், ஆசியாவிலேயே பெருமளவிற்கு மக்கள் படிக்கும் 'தினத்தந்தி' நாளிதழைத் தோற்றுவித்துத் திறம்பட நடத்தி வருபவரும் பல தொழில்களில் முதலீடு செய்து நாட்டுத் தொழில் வளத்திற்கு உதவியும் நாளிதழ்களுக்குத் தேவையான காகிதங்கள் கிடைக்காமையால், இவைகளுக்காகப் பத்திரிகை களுக்கான தாள்களை உற்பத்தி செய்யும் ஆலை நிறுவியும் வருபவரான திரு சி. பா. ஆதித்தனர் பார்-அட்-லா அவர்களை உங்கள் சார்பிலும் என் னுடைய சார்பிலும் வரவேற்கின்றேன்.

இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் முகமது இசுமாயில் அவர்கள் அனைத்திந்திய முசுலீம்

மக்களின் ஒப்பற்ற ஒரே தலைவராவார். பாகிஸ்தான் உருப்பெற உதவிய பெருமை இவருக்கும் உண்டு. காலஞ்சென்ற பெருந்தலைவர் ஜின்னுவுடன் பல ஆண்டுகள் ஒத்துழைத்த பெருமையுமுடையவர். சிறந்த அரசியல்வாதியும் ஆவார். இத்தகைய பெரியவரை எல்லோருடைய சார்பிலும் வரவேற்கின்றேன்.

அடுத்தபடியாக, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியும் தென்னுட்டு மக்களுக்குத் தொண்டுசெய்வதுதான் தன்னுடைய கடமையெனக் கொண்டவரும், தமிழர்களின் நல்வாழ்வில் கருத்துடையவருமான திரு இரா. நெடுஞ்செழியனவர்களை வரவேற்கின்றேன். கல்வியை முடித்தவுடன் என்னுடன் தொடர்புகொண்டு, யான் நடத்திய U. M. S. மாணவர் உணவு விடுதி வார்டனுக இருந்தார். அப்பொழுதுதான் இவரைப் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு வாய்ப்புக் கிட்டியது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறந்த தலைவர்களுள் ஒருவராக விளங்குகின்ருர். சென்னை அரசாங்கச் சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராகவிருந்து இவராற்றி வரும் தொண்டு பாராட்டுதற்குரியது. இவர் சிறந்த சொல்வன்மை மிக்கவர். இவரைத் தமிழுலகு நாவலரென்ற சிறப்புப் பெயரால் அழைத்துப் பெருமைப்படுகின்றது. இவருடைய புள்ளி விபரங்களோடு கூடிய சட்டமன்ற உரை ஆளும் கட்சியினரை அலமரச் செய்யும். இப்போதுள்ள அரசியலறிஞர்களில் இவர் இளையவர். இவருக்கு நல்ல எதிர்காலமுண்டு. இளமைத் துடிப்பும் அறிவும் சேர்ந்த இவருடைய உரையினைக் கேட்கவே நாம் இங்குக் கூடியுள்ளோம். நம் நாட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றி இவர் நல்வழி காட்டும் காலத்தை மிக

விரைவில் எதிர்பார்க்கின்ருேம். இத்தகையவரை உங்கள் சார்பில் மீண்டும் வரவேற்கின்றேன்.

அடுத்துப் பார்வார்டு பிளாக் கட்சியிலிருக்கும் திரு மூக்கையாத் தேவரவர்கள் தென்னுட்டில் மிக்க புகழுடன் விளங்கிய உறுதிமிக்க தலைவராகிய பசும்பொன்னேடு இரண்டறக் கலந்தவர். சட்ட மன்றத்தில் அரசாங்கத்தோடு ஒத்தூதாத உண்மையான அரசியல் வாதியாகவிருந்து, அரசாங்கக் கொள்கைகளின் குறைகளை நன்கெடுத்து நவிலும் உறுதி படைத்தவர். மக்களுக்குத் தொண்டு செய்யும்போது எத்தகைய எதிர்ப்பு வரினும் அஞ்சாது சாதிப்பதில் இவரும் இவரைச்சேர்ந்தவரும் வல்லவர். இத்தகைய பெரியவரை உங்கள் சார்பில் வரவேற்கின்றேன்.

அவசியமில்லாத அரசாங்கக் கட்டுப்பாட்டால், அரிசிப் பஞ்சம், பருப்புப் பஞ்சம், கீரைப் பஞ்சம், கத்தரிக்காய் பஞ்சம் முதலான பல பஞ்சங்களிருந்தும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் போக்குவரத்துக்குள்ள இடையூறுகளையும் பாராது வந்து திரளாகக கூடியிருந்து மாநாட்டைச் சிறப்பிக்கும் உங்கள் எல்லோரையும் இங்குள்ள எல்லோருடைய சார்பிலும் என்னுடைய சார்பிலும் வரவேற்கின்றேன்.

என்னைப்பற்றி நான் இந்தியாவிலுள்ள எந்தக் கட்சியிலும் சேர்ந்து அதனல் ஏதாவது லாபமோ நஷ்டமோ அடைந்தவனல்ல. இனிமேலும் ஏதாவதொன்று செய்து ஏதாவதொரு கட்சியில் சேர்ந்தோ அல்லது இக்கூட்டத்தில் ஏதாவது செய்தோ எந்தவிதமான பதவியையோ, புகழையோ அல்லது வேறு வகையான லாபத்தையோ அடையக் கனவிலும் எண்ணுமலும், விரும்பாமலும் இருக்கின்றேன். நம்

நாட்டிலுள்ள கட்சிகள் எல்லாம் பல நன்மைகள் சில தீமைகள் உடையனவும், சில நன்மைகள் பல தீமைகள் உடையனவுமாக விளங்குகின்றன. எக் கட்சியில் ஒரு நல்ல முறையிருந்தாலும் அந்த அளவில் அதனை வரவேற்று அதற்காக என்னால் செய்யமுடிந்ததைச் செய்துகொண்டும் வருகின்றேன். நான் காங்கிரசு இயக்கத்தில் உறுப்பினனாக இல்லா விட்டாலும் 1915-ம் ஆண்டு முதல் பம்பாய், லக்னோ முதலிய இடங்களில் கூடிய காங்கிரசு மகாசபைகளுக்கு இடைவிடாது ஐந்தாறு முறை கட்கு மேல் போயிருக்கின்றேன். அக்காலக் காங்கிரசுக் கொள்கைகளில் பல எனக்குப் பிடிக்கும். சில யாருக்கும் பிடிக்காதவையாயிருந்தன என்பதும் நாம் நினைவுகொள்ளவேண்டும். ஆயினும் காங்கிரசில் அன்றும் இன்றும் உள்ள தலைவர்களில் அநேகர் இன்றும் எனக்கு வேண்டியவர்களாயும், நண்பர்களாயும் உள்ளனர். கம்யூனிசம் என்ற கருத்தை யானறியாக் காலமுதல், பின்னர் ரஷ்யா, ரஷ்யாவின் ஆட்சியிலுள்ள கிழக்கு செர்மனி முதலான நாடுகளுக்குச் சென்று நேரில் பலவற்றை அறிந்துள்ள காலம்வரை, கம்யூனிசம் தொடர்பான கொள்கைகளில் அதிகமானவை என்னுடைய மேற்பார்வையிலுள்ள தொழில் நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும் கம்யூனிசத்திலுள்ள வேறு பல கொள்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. இவைபோன்று சோஷியலிஸ்ட் கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், முசுலீம் லீக் போன்ற கட்சிகளிலும் சில கொள்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. இதுகாறும் கூறியவற்றால், நான் எக்கட்சியின் சார்பும் உடையவனல்ல என்பதையும், எல்லாக் கட்சிகளிலுமுள்ள நல்லவைகளை வரவேற்பவன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வெள்ளையைக் கறுப்பென்று சொன்னால், ஆமாம் மிகவும் கறுப்புதான் என்று காங்கிரசில் உள்ளவர்கள் போன்று சொல்லும் சுபாவமுடைய வனல்ல. தென்னகத்தின் ஒப்பற்ற, தனிப்பெருந் தலைவரும் யாருக்குமில்லாத அஞ்சா நெஞ்சம் படைத்தவரும் முதன் முதலில் இந்தி வந்தபோது அதனை மிகவும் வன்மையுடன் எதிர்த்த மாபெரும் தலைவருமான பெரியார் அவர்கள் இன்றும் ஒவ்வொரு நாள் தவறாது ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று கூட்டங்களில் ஒவ்வொரு கூட்டத்திலும் இரண்டு மூன்று மணி நேரம் கூட்டத்திலிருப்பவருக்கு முன்னேற்ற அறிவுரைகள் நிகழ்த்துகின்றார். அவர் உரையின் முடிவில் நான் சொல்லுவனவற்றை நன்கு சிந்தித்துப் பாருங்கள். நல்லது என்று பட்டவற்றை மேற்கொள்ளுங்கள் என்று கூறுகின்றார். இந்த பாடத்தை எனக்கு 1924-லேயே கற்பித்தார். அதிலிருந்து எக்கட்சியிலுள்ளவர்களானாலும், நெருங்கிய நண்பர்களானாலும், எதிர்ப்பவர்களானாலும் அவர்கள் கூறுவனவற்றை அவர் சொன்னபடிச் சிந்தித்துப் பார்த்துப் பொறுக்கியெடுத்து வாழ்வில் மேற்கொண்டு நடந்துவருகின்றேன்.

இவ்விடத்தில் ஒன்று நினைவுபடுத்த விரும்புகின்றேன். இந்தியை முன்னர் எதிர்த்த அதே பெரியார் சில காரணங்களால் காங்கிரசை இப்போது ஆதரித்து வருகின்றார். இருந்தாலும் மத்திய அரசாங்கம் மாநிலத் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளலாம் என்பதை ஆதரிக்கும் வகையில் அவருடைய பத்திரிகையாகிய 'விடுதலையில்' 28—12—64 ஆங்கிலம் வேண்டுமென்னும் திரு S. K. சட்டர்சியின் பேச்சை மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

எனக்கு எக்கட்சி மீதும் வெறுப்பில்லை. அதற்குச் சான்றாக 30—1—54-ல் சென்னையில் நிகழ்ந்த பார்க்பேர் கண்காட்சியில் (Parkfair Exhibition) இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் ஒரே மேடையில் இருந்து பேசியதைக் கூறலாம். அதுவே இந்திய வரலாற்றில் முதலும் கடைசியுமான நிகழ்ச்சியாகும். அவர்களின் பெயர்களைச் சொல்லுகின்றேன்.

திரு டாக்டர் P. சுப்பராயன்
,, டாக்டர் P. வரதராசுலு நாயுடு
,, டாக்டர் V. K. ஜான்
,, K. காமராசர்
,, K. T. கோசல்ராம்
,, S. இராமநாதன்
,, A. கோவிந்தசாமி
,, S. மோகன் குமாரமங்கலம
,, கோவை சின்னத்துரை
,, C. N. அண்ணாத்துரை
,, S. குருசாமி
,, S. B. ஆதித்தனார்
,, M. முகம்மது இசுமாயில்
,, இரா. நெடுஞ்செழியன்
,, பெரியார் ஈ. வெ. இராமசாமி

நான் ஆங்கிலக் கல்லூரிகளிலோ அல்லது வேறு வகையான கல்விக் கூடங்களிலோ 45-ஆண்டு வரை படிப்பதற்காக அடியெடுத்து வைத்தவனல்ல. அதன் பின்னர்ப் பத்தாண்டுகளில் சொற்பொழிவாற்றவும் நான் எடுத்த சினிமாப் படங்களைக் காட்டவும் சில கல்விச் சாலைகளுக்குப் போயிருக்கின்றேன். அரசாங்கத் தொழிற் கல்வி நிலையத்திற்குப் பிரின்சு

பாலாக மூன்றுண்டுகள் பணியாற்றியுள்ளேன். அது முதல் இன்று வரை ஒரு குறுகிய காலத் தொழிற்கல்விக் கூடத்தை நடத்தி வருகின்றேன். இவை எல்லாவற்றிற்கும் பின்னர் என்னுடைய 62-ம் வயதில்தான் மாணவர்களுக்கு எவ்வாறு சொல்லிக் கொடுக்கின்றூர்கள் என்பதை அறிந்து கொள்ள இங்கிலாந்திலுள்ள தொழிற்பள்ளியொன்றில் மாணவனுக இருந்தேன். நான் ஆங்கிலத்திலுள்ள எந்த இலக்கண இலக்கியங்களையும் முறையாகப் படித்ததில்லை. ஆங்கிலத்திலுள்ள ஷேக்ஸ்பியர், டிக்கனஸ், ஸ்காட், வெல்சு, ரசல் போன்றவர்கள் எழுதிய நூல்களை முறையாகப் படித்து அதனுல் இந்தி மொழிப் பயித்தியம் போல ஆங்கிலப் பயித்தியம் பிடித்து, ஆங்கிலம்தான் வேண்டுமென்று நான் கூறினுல் என்னையும் நீங்கள் ஆங்கிலப் பைத்தியக்காரனென்று கூறிவிடலாம். நான் அத்தகையவனல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆங்கிலத்தில் மேலே கூறியவர்களும் மற்றவர்களும் எழுதிய நூல்களெல்லாம் நம்நாட்டு இளைஞர்களுக்கு ஆகாதென்பதைக் கண்டு, அவைகள் இந்திய இளைஞர்களின் இளம் மூளைகளை அரித்துத் தின்னும் சிதல்கள் என்ற கருத்துப்பட "White ants for Indian Young brains to be burnt" என்ற தலைப்பிட்டு எரிக்கப்படவேண்டிய பட்டியலில் சேர்த்திருக்கின்றேன்.

நான் சாதாரணமாக உலகில் அமைந்து நடந்து கொண்டிருக்கின்ற அம்சங்களைப் பார்த்து என்னுடைய அநுபவத்தில் தோன்றிய உண்மைகளைத் திரிபில்லாமல் அப்படியே கூறுகின்றேனே ஒழிய;

யார் மீதும், எந்த கட்சி மீதும் பகையுணர்ச்சியால் கூறுவதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்திய நாட்டின் இயல்பு.

இந்தியா உலகில் பழம் பெருமை மிக்க நாடு. ஆனால் இது ஒரே நாடாக, ஒரு மொழிகொண்ட நாடாக சரித்திர காலத்தில் என்றுமிருந்ததில்லை. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு பெரும் நாடாகத் திகழ்ந்தது. கடந்த சில நூற்றாண்டுகளில் ஒரு நாடாக உருவாக்கப்பெற்றது. இந்தியாவில் தெற்குப் பகுதியில் உள்ள தமிழ், ஆந்திர, கன்னட மலையாள மாநிலங்களும், வடக்குப் பகுதியிலுள்ள மராட்டி, வங்காளம் போன்ற பிற மாநிலங்களும் தனித்த மொழியும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட தேசிய இனங்கள் வாழும் மாநிலங்களாகும். இவைகள் இந்தியா என்ற பெயரில்லாமலேயே, தங்கள் கலை, நாகரிகங்களை உலகில் பரப்பியும், பிற நாட்டுக் கலை, நாகரிகங்களைத் தாம் மேற்கொண்டும் உலகறிய விளங்கியவையாகும்.

இந்திய ஒருமைப்பாடு.

சரித்திர காலத்தில் சமய, மதக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுகின்ற அளவில் மேம்போக்காக இருந்த அனைத்திந்திய ஒருமைப்பாட்டை ஆங்கிலமும் ஆங்கில அரசாட்சியும் நன்கு வலுப்பெறச் செய்துள்ளது. இந்திய மொழிகளின் கருத்து வளர்ச்சிக்கு ஏராளமாக ஆங்கிலம் உதவி செய்துள்ளது. சுதந்திரம், உரிமை, விடுதலை என்ற கருத்தை அரசியலோடு பொருத்தி இந்திய மொழிகளுக்கு வழங்கியது ஆங்கிலமேயாகும். Freedom,

Liberty போன்ற சொற்களின் கருத்துக்களோடு தொடர்புகொண்ட ஆங்கில வரலாறு, இலக்கிய நூல்களின் கருத்துக்களே அரசியல் விடுதலே வேண்டுமென்ற ஆர்வத்தை ஊட்டி, அந்நியராட்சிக்கு எதிராக இந்தியா முழுமையும் வீறுகொண்டு எழச் செய்தது. இந்திய நாட்டின் அறிவியல், தொழிலியல் (Science and Industries) வளர்ச்சிக்கு உதவிவருவது ஆங்கிலமேயாகும். இந்திய நாட்டில் மதச்சார்பான அறியாமையாலும் குருட்டுப் பழக்க வழக்கங்களாலும் கீழ்மையடைந்து வேற்றுமைபட்டுக்கிடந்த மக்களே, அறிவுலகத்தில் அடியெடுத்து வைக்க வைத்து என்றுமே நாமறியா நாகரிக நல்வாழ்வை உணரும்படிச் செய்தது. இந்திய நாட்டு மக்கள் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளும் மொழியாகவும் ஆங்கிலம் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது. இப்போது இந்தியாவில் பரவலாகக் காணப்படும் அனைத்திந்திய ஒருமைப்பாடெல்லாம் ஆங்கில ஒருமைப்பாடேயாகும். ஆங்கில மொழியை இந்திய அரசியலினின்றும் எடுத்துவிட்டால், அக்கணமே இந்திய அரசியல் என்ற கருத்தும் நம்மைவிட்டு அகலும். பிறகு உள்ளதெல்லாம் வட்டார மொழிகளுடன் தொடர்புடைய வட்டார அரசியல் கருத்துக்களேயாகி அவையே நம் எல்லோருடைய உள்ளத்திலும் இடம் பெறும். இந்திய நாகரிகம், இந்திய வாழ்வு என்ற எல்லாம் ஆங்கிலத்துடன்தான் இறுகப் பிணைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் வந்து அரசு மொழியான காலமுதற்கொண்டே இந்திய நாட்டினரால் மிகவும் மதிக்கப்பெறும் அரசியல் தலைவர்கள், மதவியல் தலைவர்கள் கல்விநெறி வல்லுநர்கள் விஞ்ஞானிகள் யாவரும் தங்கள் கருத்துக்களை மக்களுக்கு வழங்கக் கருவியாகக் கொண்ட மொழி ஆங்கிலமே. இவ்வாறு

கடந்த ஒரு நூற்றுண்டுக் காலமாக இந்திய மக்களின் கருத்துக்களோடு ஒன்றிக் கலந்துள்ள ஆங்கில மொழியின் இன்றியமையாமையை இன்றுள்ள காங்கிரசு ஆட்சியாளர் உணரவில்லை. மேற்காட்டிய அண்மைக்கால வரலாற்றுண்மையை உணர மறுத்து, இதுவரையிலும் இந்திய ஒருமைப்பாடு இல்லாதது போலவும், இல்லாத ஒருமைப்பாட்டை இந்தியின் மூலம் சாதிப்பது போலவும் வருகின்ற சனவரி 26-ம் நாள் முதற்கொண்டு ஆட்சிமொழி இந்திதான் என்று இந்தியை அரியணை ஏற்றும் அரசியலாரின் போக்கை என்னென்று கூறுவது?

எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகின்றது. பிள்ளை வரம் பெறக் கணவனை அழைத்துக் கொண்டு கடலில் நீராடச் சென்றுளாம் ஒருத்தி. சென்றவள் கணவனையே கடலில் இழந்துவிட்டு வீடு வந்தாளாம். அது போல இந்திய ஒற்றுமைக் காகப் புகுத்தப்படும் இந்தி மொழியால் இப்போது இருக்கும் ஒற்றுமையையும் அடியோடு இழந்து ஒருவருக்கொருவர் எதிரிகளாக ஆகப்போகின்றோமே என்று நினைந்து நினைந்து வருந்துகின்றேன்.

இந்தியா எங்கணும் புகழும் பெருமையும் பெற்றிருந்த மதிப்புக்குரியவர்களான திரு. காந்தியடிகள், திரு. சவகர்லால் நேரு, திரு. அன்னிபெசன்ட், திரு. அரவிந்தர், திரு. திலகர், திரு. கோகலே, திரு. லாலாலஜபதிராய், திரு. விவேகானந்தர், திரு. தாகூர், திரு. சி. வி. இராமன், திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார், டாக்டர். குருசாமி முதலியார், டாக்டர். ரெங்காச்சாரி, திரு. செகதீச சந்திரபோசு, திரு. சி. ஆர். தாசு, திரு. S. K. சட்டர்ஜி, சர். A. லட்சுமணசாமி முதலியார், சர். A. ராமசாமி

முதலியார், சர். சி. பி. இராமசாமி அய்யர், திரு. சீனிவாச சாஸ்திரியார், திரு. சி. என் அண்ணாதுரை, திரு. பராஞ்சிபே, திரு. ஆச்சாரிய கிருபளானி, திரு. என். ஜி. ரங்கா, திரு. இராமகிருஷ்ணன், திரு. அநந்தராமகிருட்டினன், திரு. கிர்லோஸ்கர், திரு. ஜம்பேகர், திரு. லாலா ஸ்ரீராம், திரு. K. V. ரெட்டி, திரு. சி. ஆர். ரெட்டி, திரு. கோபால் ரெட்டி, திரு. T. A. இராமலிங்கஞ் செட்டியார், திரு. T. M. நாராயணசாமி பிள்ளை, திரு. சேஷசாயி, திரு. கலிபுல்லா சாயபு, திரு. ஜாகிர் உசேன், திரு. இராதாகிருட்டினன், திரு. சுரேந்திரநாத் பானர்ஜி, திரு. சின்ஹா, திரு. கங்காராம், திரு. ராசாராம் மோகன்ராய், திரு. மத்தாய், திரு. தேஷ்முக், திரு. ஜான், திரு. சுபாஷ் சந்திரபோசு, திரு. விசுவேசரய்யா, திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை, தேசியக் கவிஞர் திரு. பாரதியார், திரு. சோமசுந்தர பாரதியார், திரு. மறைமலை அடிகள், திரு. T. P. வேதாசலம், திரு. S. குருசாமி, திரு. மணவாள ராமாநுஜம், கணிதமேதை திரு. இராமாநுஜம், பேராசிரியர் திரு. ரத்தினசாமி, திரு. கஸ்தூரிரங்க அய்யங்கார், திரு. S. சீனிவாசய்யங்கார், திரு. விசயராகவாச்சாரியார், திரு. புலாபாய் தேசாய், திரு. K. M. முன்ஷி, திரு. மொரார்ஜி தேசாய், திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், திரு. சி. சுப்ரமணியம், திரு. S. V. இராமசாமி, திரு. S. K. பட்டீல், திரு. குல்சாரிலால் நந்தா, திரு. சஞ்சீவி ரெட்டி இப்போது இம்மேடைமீது வீற்றிருக்கும் திரு. பி. டி. இராசன், திரு. சி. இராசகோபாலாச்சாரியார், திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார், திரு. முகம்மது இசுமாயில், திரு. இரா. நெடுஞ்செழியன், திரு. சி. பா. ஆதித்தனர், திரு. மூக்கையத் தேவர் இவர்களெல்லாம் இந்தி படித்தும் பேசியுமா பெரியவர்கள்

ஆனார்கள்? இந்தி பேசியா ஒருமைப்பாட்டோடு வாழ்ந்தார்கள்? இவர்கள் இந்தி படித்திருந்தால், இவர்களும் எங்காவது ஒரு மூலே ரயில்வே ஸ்டேஷனில் மூட்டை தூக்கிக்கொண்டுதானிருப்பார்கள். அவர்கள் இருக்கும் இடங்களிலேயே சண்டை போட்டுக்கொண்டு மடிந்தும் இருப்பார்கள்.

மேற்காட்டியவர்கள் ஆங்கிலமொழி வாயிலாகவே தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் வெளிப்படுத்தியது மட்டுமல்ல; இந்திய மக்களும் உலகமும் அவர்கள் கருத்துக்களை நன்கறிய வாய்ப்புக் கொடுக்கக் கருவியாக நின்றதும் ஆங்கிலமே. இவர்களெல்லாரும் அந்நிய மொழியைக் கையாளுவதுபோலக் கையாளவில்லை. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவரும் வியக்கும் வண்ணம் வள்மாகக் கையாண்டுள்ளனர். இம்முறையில் ஆங்கில மொழியானது இப்போது இந்தியா எங்கும் ஓரளவு பரவி வேரூன்றியுள்ளது. இவ்வாறு ஓரளவு பரவியுள்ள ஆங்கிலத்தை அந்நிய மொழி என்று ஒதுக்கினால், இந்தி பேசப் பெருத மாநில மக்களுக்கு, மிகவும் வேறுபாடானதும், எந்த வேலைக்கும் ஆகாததும், வேண்டாததுமான இந்தி மொழி சுத்தமான **அந்நிய மொழியே யாகும்.** தென்னாட்டில் தாயின் கருவிலிருக்கும் சிசு முதற்கொண்டு யாருமே இந்தி மொழியை ஏற்றுக்கொள்ள போவதில்லை என்பதை அறியட்டும்.

இந்திய ஒருமைப்பாட்டிற்கும் வெளியுலகத் தொடர்புக்கும் ஆங்கிலம் பயன்படும் இன்றியமையாமையை விளக்கிய மத்திய கல்வி அமைச்சர் திரு. M. C. சக்ளா அவர்கள் கூறியதைப் பற்றி பத்திரிகைகளில் வெளி வந்ததை அப்படியே இங்கு கூறுகின்றேன்.

Mr. Chagla said that till Hindi could take the place of English let us not destroy the link language. ....he hoped that the value and importance of English language would be realised as an international language. It is a window to the world outside. It is a great asset that we possess. Let us not throw it away in a spirit of indignation or linguistic partiotism.

"The Times of India",
19—11—1964 - Page 8.

இதன் மொழிபெயர்ப்பு :

இப்போது தொடர்பு மொழியாகவுள்ள ஆங்கிலத்தின் இடத்தை இந்தி எடுத்துக் கொள்ளும் வரையிலும் ஆங்கிலத்தை அழித்து விட வேண்டாம். இதனால் ஆங்கிலம் இப்போது தொடர்பு மொழியாக நன்கு பயன்பட்டு வருவது புலனாகும்.

"இப்போது இந்திய உள்நாட்டுத் தொடர்பு மொழியாக விளங்கும் ஆங்கிலம் உலக மக்களுடன் தொடர்புகொள்ளும் மொழியாகவும் விளங்கும். அதன் மதிப்பையும் இன்றியமையாமையையும் நாமுணரவேண்டும். இந்திய நாட்டார் வெளியுலகத்தைக் காணும் அறிவுச் சாளரமாக இப்போது ஆங்கிலம் இருக்கின்றது. இது இந்திய மக்களுக்குக் கிடைத்த பெரிய முதற் பொருளாகும். அந்நியராட்சி மொழியாக இருந்தது என்ற கோபவுணர்ச்சியாலும், நம் நாட்டு மொழி

மீது நாம் கொள்ளும் மொழிப்பற்றினாலும் நாம் அதனை ஒதுக்கிவிடலாகாது."

இவ்வாறு மத்திய கல்வி மந்திரி சொல்லியுள்ளார். மத்திய மந்திரி கூறுவதைப்போல் தொடர்பு மொழியாக இங்கிலீஷ் இப்போது இருக்கும்போது ஹிந்தி மொழியைத் திணிக்கவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது?

ஆட்சிமொழியாவதற்கு இந்தி மொழி ஒரு சிறிதும் தகுதியற்றது.

பலநூறு வருடங்கள் முயன்றாலும் இந்தி சொல்வளமடையாது. பிச்சைக்காரன் வாந்தியெடுத்ததுபோல ஒன்றோடொன்று தொடர்பில்லாப் பல மொழிகளின் இயைபற்ற கதம்பக் கோவையே இந்தி என்பது. உத்தரப் பிரதேசத்து இந்தி உருது கலப்புடையது. மத்திய பிரதேசத்து இந்தி மராட்டி கலப்புடையது. பீகாரிலேயே இந்தி என்றும் மைதிலி என்றும் வேறுபட்டிருக்கின்றது. இந்திய ஒருமைப்பாட்டிற்குக் கருவியாகப் புகுத்தப்படும் இந்தி மொழியில் ஒருமைப்பாடு ஏற்பட ஒரு நூற்றாண்டானாலும் முடியாது. இந்தி மொழி என்ன முயன்றாலும் பொது மொழியாகும் தகுதியைப் பெறாது.

இந்தி மொழியால் ஒருமைப்பாட்டைச் சாதிக்கமுடியுமா?

ஒரு மொழி பேசும் நாடுகள் உலகில் ஒற்றுமையாக இருக்கின்றனவா? நம் நாட்டில் வங்க மொழி பேசும் வங்காளத்தில் மத அடிப்படையில் பெருங் கலகம் விளையவில்லையா? ஒரே மொழியும் ஒரே

மதமும் கொண்ட இன்றைய பாகிஸ்தானத்தின் நிலையென்ன? ஒரே தாய்மொழியான மலையாளத்தை பொது மொழியாகக் கொண்ட கேரள நாட்டின் நிலைமை என்ன? தொடர்ந்து மூன்றுண்டுகள்கூட ஒரு மந்திரி சபை நிலைபெற முடியவில்லை. ஒரே கொள்கையைத் தழுவும் சீனுவும், ரஷ்யாவும் இன்று ஒற்றுமையிழந்து கிளர்ச்சிப் போரில் ஈடுபட்டிருப்பதை நாமறிவோம்.

இதனுல் நாமறிவது என்ன? ஒரு நாட்டின் ஒற்றுமையை மதமோ, மொழியோ, கொள்கையோ சாதிக்காது என்பதுதான். பிறகு ஒற்றுமையை வளர்ப்பது எவ்வாறு? எல்லா மக்களின் நன்மை தீமைகளில் பங்கு கொள்ளும் மனிதப் பண்புகளை வளர்ப்பதன் மூலமே பெற முடியும். ஆகவே இந்தி மொழி மூலம் இந்திய ஒருமைப்பாட்டைச் சாதிக்க முடியாது. இந்திய நாட்டில் வாழும் எல்லா தேசிய இனங்கட்கும் சிறுபான்மை அல்லது பெரும்பான்மை என்று பாராமல் ஒத்த அளவில் எல்லா வகையான வாய்ப்பு வசதிகளை அளிப்பதன் மூலமே இந்திய ஒருமைப்பாட்டைச் சாதிக்க முடியுமென வற்புறுத்தி கூறுகின்றேன்.

இந்தி பேசுவோர் பெரும்பான்மையோர் என்ற வாதமும் நிலைபெருதது.

பெரும்பான்மை சிறுபான்மை என்பதெல்லாம் ஒன்றனேடு சார்த்திப் பேசுவதால் பெறப்படுவது. சார்த்தப்படும் பொருளில் பெரும்பான்மையுமில்லை. சிறுபான்மையுமில்லை. உதாரணமாக ஒன்று கூறுவோம். ஆங்கில மறிந்த உலக மக்களோடு இந்தி பேசுவார் தொகையினை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தி

பேசுவோர் சிறுபான்மையோராவார். இந்தி பேசுவாரோடு தென்னாட்டவரை இணைத்துக் காண்பதால் தென்னாட்டவர் சிறுபான்மையோராகின்றனர். இணைத்துக் காணாதவழி அவரவரும் பெரும்பான்மையோரே என்பதை உணரலாம். இதன் உட்கருத்து இந்தி பேசுவாரோடு சேர்ந்திருக்கின்றோமென்பதால், எங்களை நாங்கள் வாழும் நாட்டிலேயே சிறுபான்மையோரென்று கூறி உன்னாட்டு மொழியை எங்கள் நாட்டின் மீது சுமத்துகின்றாய்! உன்னோடு சேரவில்லை, நாங்களே தனியாக இயங்குவது என்றாகிவிடுமானால், எங்களைச் சிறுபான்மையோரென்று எப்படிக்கூறமுடியும்? கொஞ்சகாலத்திற்கு முன்னர் இந்தி பேசும் வடநாட்டினரை நாட்டை விட்டே போக்க வேண்டுமென்னும் இயக்கம் தென்னாட்டில் சிறந்து நின்றது. இப்போது ஓரளவு அது தணிந்து காணப்பெறுகின்றது. இப்போது அரசியலார் இந்தி மொழியை ஆட்சி மொழியாகவோ, பொது மொழியாகவோ புகுத்தினால் உள் நாட்டில் வாழும் மக்களுக்கும் இந்தி பேசுவோருக்கும் இப்போதுள்ள நட்புறவு அற்றுப் போகும் என்பதில் சந்தேகமில்லை.

இதற்காக இந்திய அரசியல் சட்டத்தைக்காட்டி இங்குள்ள எவரையும் அஞ்ச வைக்க முடியாது. நாட்டு மக்களின் உண்மையான மன நிலைமையினைக் கொஞ்சமும் மதியாமல், எட்டில் யாரோ ஒரு சிலர் எழுதிவைத்ததைச் சட்டமென்று கொண்டு அரசாங்கத்தார் நடவடிக்கை எடுப்பார்களாயின், நாங்கள் மட்டுமல்ல! தென்னாடு முழுமையுமே சிறைச்சாலையாக மாறிவிடுமென எச்சரிக்கின்றேன். இந்தி மொழி பொது மொழியாகவோ அரசாங்க மொழியாகவோ புகுத்தப் பட்டால் நாட்டில் நிகழவிருக்கும் தீங்குகளை மேற்கு வங்காளச் சட்ட மன்றத் தலைவரும்,

இந்தியாவிலுள்ள சிறந்த பழங்காலத் தற்கால மொழி நூற்புலவருமான டாக்டர் திரு. சுநீக்குமார் சட்டர்சி அவர்கள் 25—12—64 கட்டாக்கில் நிகழ்ந்த வங்காள இலக்கிய மாநாட்டில் தலைமையேற்று நிகழ்த்திய உரையில் நன்கு குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்திகளில் சில பகுதிகளைத் தென்னாட்டில் கூடியுள்ள நாங்களும் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

> "........It had thrown the whole country into a turmoil and made us forget the many pressing and complex problems confronting the country".

இதன் மொழிபெயர்ப்பு :

> "இந்திய நாட்டில் இப்போதுள்ள மொழிக் கொள்கை நம் நாட்டை எதிர்நோக்கியுள்ள இன்றியமையாத் தேவைகளிலும் மிக்க சிக்கல்களாகவுள்ள பிறவற்றிலும் மனம் செல்லவிடாதவாறு மறக்கச் செய்து இந்தியா முழுமையும் குழப்பத்திலாழ்த்தும்" என்று கூறியுள்ளார்.

> "The evil of linguism threatened to strike at the root of all unity and nullify all our efforts for emotional integration".

இதன் மொழிபெயர்ப்பு :

> இந்திய நாட்டு மொழிக் கொள்கையால் அனைத்திந்திய ஒற்றுமையின் ஆணிவேரைத் தாக்கிச் சிதைத்து, உணர்வோடு கூடிய நம்முடைய ஒருமைப்பாட்டையும் வலிவிழக்கச் செய்கின்றது.

"Advocating the continuance of English as an all - India link language, Dr. Chattarjee said it would be detrimental to the cause of national integration - if to please the people of North India, they turned a blind eye on the other half of the country and tried to replace English by Hindi".

மொழி பெயர்ப்பு :

அனைத்திந்திய தொடர்பு மொழியாக ஆங்கிலத்தைக் கொள்ள வேண்டுமென்று பரிந்துரை பகர்ந்த திரு. டாக்டர் சட்டர்சி, வட இந்திய மக்களில் ஒரு சில வெறியர்களை மகிழ்விப்பதற்காக, இப்போதுள்ள ஆங்கிலத்திற்கு மாற்று மொழியாக, இந்தியை அனைத்திந்திய மொழியாக, பெரும்பான்மையாகவுள்ள மக்களின் எதிர்ப்புணர்ச்சியைப் பாராது செய்வாரேல், அது இந்திய ஒருமைப் பாட்டைக் கெடுத்ததாகும்" என்று கூறினார்.

"It would, he feared, lead to the creation of two classes of citizens - the Hindi speaking privileged class and a second class of under - privileged non-Hindi speaking people."

மொழி பெயர்ப்பு :

இந்திய அரசியலாரின் மொழிக் கொள்கை, இந்திய நாட்டு மக்களில் இந்தி பேசும் பகுதியினரை அரசாங்கத்தின் முதல் தரமான செல்லப் பிள்ளைகளாகவும், இந்தி பேசாத

பகுதியினரை இரண்டாந்தரமான செல்லங் குறைந்த பகுதியினராகவுமான இரண்டு புதிய பிரிவினரைப் படைக்குமெனத் தாம் அஞ்சுவதாகக் கூறினர்.

"Many of us feel that the present language policy of the Central Government is working to the disadvantage of the different state languages and placing obstructions on their way to progress."

மொழி பெயர்ப்பு:

"மத்திய அரசாங்கத்தின் நடைமுறை மொழிக் கொள்கை வேறுபட்ட மாநிலங்களின் மொழிகளுக்கான முன்னேற்றத்திற்கு இடையூறாயும், அவர்கள் மொழியாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளும் முன்னேற்றச் செயல் முறைகளுக்குத் தடங்கல்களாகவும் இருக்குமென இந்தி பேசாத பகுதியினராகிய நாம் உணருகின்றோம்" என்று கூறினர்.

ஜெர்மன், சமஸ்கிருதம் போன்ற மொழிகளை விருப்பப்பட்டு பயிலுவார் போல இந்தி மொழியைத் தேவையுள்ளவர்கள் கற்கலாம். இந்தி பேசப்படும் மாநிலங்கட்கு அரசாங்க வேலை காரணமாகவோ, வியாபாரத்திற்காகவோ போகின்றவர்கட்கு இந்தி மொழிப் பயிற்சி தேவைப்படும். அவர்கள் பயிலுவதற்கு நாட்டிலுள்ள முக்கிய நகரங்களில் ஒவ்வொரு பள்ளி இருந்தால் போதும். இந்திய நாடு முழுமையிலுள்ள பகுதிகளிலெல்லாம் பிறந்து வாழும் கோடானுகோடி சிறுவர்களும், சிறுமிகளும் முன்னமே எல்லோரும் படித்து அறிந்திருக்கும்

அறிவு மொழியை விட்டு அறிவில்லாத மிருக மொழியை ஏராளமான செலவு செய்து கஷ்டப்பட்டுக் கற்க வேண்டியது எதற்காக? நாட்டிலுள்ள எல்லோரும் இந்தி வெறியர்களாகிய ஒரு சிலருக்கு அடிமைகளாவதற்கா? இந்தி மொழியை அரசாங்கத்தார் கட்டாயப்படுத்தினால், விருப்பப்பட்டவர்கள் படிக்கலாமென்று இருப்பவர்களும்கூட இந்தி மொழியைக் கனவிலும்கூட நினைக்கமாட்டார்கள்.

தமிழுக்கும் மேம்பட்ட மொழியே இல்லை. தமிழிலிருந்துதான் மற்ற மொழிகள் பிறந்ததால், தமிழே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்றும் நிலை நிறுத்துவோம்.

முன்னர்ப் பல ஆண்டுகளில் இந்தி பயிலவேண்டுமென்ற மாணவர்கட்காக இந்தி பள்ளிக்குச் சென்று சிபார்சு செய்திருக்கின்றேன். இப்போது அரசாங்கம் மேற்கொண்டுள்ள கெடுபிடியைப் பார்த்தால் ஒன்று சொல்லத் தோன்றுகிறது. இனிமேல் யாரும் இந்தி படிக்கக்கூடாது. வடக்கிலிருந்து வந்தவர்கள் தவிர்த்த மற்ற இந்தி படித்தவர்களும் இந்தி பேசக் கூடாது. அரசாங்கத்தை மகிழ்விப்பதற்கு இந்தி படிக்கும் இந்தி பேசும் தமிழனின் உடப்பிலுள்ள இந்தி ரத்தத்தை எடுத்துவிட்டுத் தமிழ் ரத்தம் பாய்ச்ச வேண்டும். எந்தப் பள்ளிகளிலும் இந்தி வகுப்புகள் இருக்கக் கூடாது.

இந்தியா முழுமையிலுமுள்ள அரசியல் தலைவர்கட்கும் மற்றுமுள்ள மக்களுக்கும் இந்தியா, இந்தியர் என்ற உணர்ச்சி எப்போதோ ஏற்படுவது. அனைத்திந்தியாவையும் பாதிக்கும் நன்மை, தீமை நிகழும்

போது இவ்வுணர்ச்சி ஏற்படுகின்றது. உதாரணமாகச் சீனப் படையெடுப்பைக் கூறலாம். இந்நிகழ்ச்சியால் விளையும் தீமை இந்தியாவில் வாழும் எல்லா மக்களையும் பாதிக்கும். அப்போது இந்தியர் என்ற உணர்ச்சியோடு நாடு முழுமையும் செயல்பட்டதைக் கண்டோம். மற்ற காலங்களில் மாநிலவுணர்ச்சியே எங்கும் எவ்விடத்தும் தலைதூக்கி நிற்கக் காணுகின்றோம். இந்தியைக் கட்டாயப் படுத்தும்போது எல்லோரும் இந்தியர் என்ற உணர்ச்சி அற்றுப் போகும்.

இவ்வாறு தேவையற்ற ஒன்றுக்காக இந்திய அரசாங்கத்தார் செலவழிக்கும் பணம் எவ்வளவு? மக்களுக்கு இன்றியமையாத வேண்டிய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, தங்குமிடம் இவைகளை நல்ல முறையில் எல்லோருக்கும் கிடைக்க வசதி செய்யப்பெறவில்லை. சில நாட்களுக்கு முன்னர் உணவு நெருக்கடியால் நாட்டு மக்கள் பட்ட அவதியை நாம் நன்கறிவோம். இந்தி மொழியைப் பரப்ப மத்திய அரசாங்கம் செய்யும் செலவுத் தொகையின் அளவை மத்திய கல்வி அமைச்சர் திரு M. C. சக்ளா அவர்கள் வெளியிட்டதாக செய்தித் தாள்களில் வந்ததை அப்படியே உங்கட்குக் கூறுகின்றேன். டில்லியில் கூடிய முதன் மந்திரிகள் மாநாட்டில் கூறியதாக 'அமிர்த பசார் பத்திரிகா' என்ற இதழில் 15—12—64ல் வெளியான செய்தியாவது.

"Mr. Chagla said that the full cost of schemes for propagation of Hindi in Non-Hindi speaking states would be met by the centre".

இதன் மொழிபெயர்ப்பு:

"இந்தி பேசப் பெருத மாநிலங்களில் இந்தி மொழியைப் பரப்ப இடப்படும் திட்டங்களுக்கான செலவு முழுவதையும் மத்திய அரசாங்கம் ஏற்கும்".

இந்தி மொழிக்காக முன்னர் இந்தி பேசாத மாநிலங்கட்கு மட்டும் செலவழித்த தொகை எவ்வளவு? இப்போது செலவழிக்கப்போகும் தொகை எவ்வளவு? இதனையும் அவர் கூறியதாக வந்த செய்தித் தாளின் குறிப்பினை அப்படியே எடுத்துக் கூறுகின்றேன்.

"The Conference was informed that as against Rupees 20 Lakhs sanctioned to non-Hindi states last year for propagation of Hindi, the amount allotted this year was Rupees 1 crore." (P. T. I.)

"*Amrita Bazar Patrika*",
15—12—64.

இதன் மொழிபெயர்ப்பு:

இந்தி பேசப் பெருத மாநிலங்களில் இந்தியைப் பரப்புவதற்காகச் சென்ற ஆண்டில் செலவழித்த இருபது லட்ச ரூபாய்களுக்குப் பதிலாக இந்த ஆண்டில் செலவழிக்கப்பட இருக்கும் தொகை ஒரு கோடி ரூபாய்களாகுமென்று முதன் மந்திரிகள் மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

திரு S. K. சட்டர்ஜி கூறியதுபோல இந்தி மொழியும் இந்தி பேசுவோரும் அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக ஆய்விட்டார்கள். இந்தி பேசாத மாநிலத்து மக்களே! உங்கள் மொழியின் கதியும் உங்கள் கதியுமென்ன? சிந்தித்துப் பாருங்கள்!

கடலின் உப்புத் தண்ணீரை யாரும் குடிக்க மாட்டார்கள். அது கிடைத்தாலும் அதன் அருமையைப் பாராமல் கீழே கொட்டிவிடுவார்கள். நம் அரசாங்கம் நம் இந்திய மக்களைச் சர்க்கரை ஆலையில் சாறு பிழிவது போலப் பிழிந்தெடுத்த இனிப்பான சாற்றைக் கொஞ்சமும் எண்ணிப் பார்க்காமல் கடல் நீரைக் கொட்டுவது போலக் கொட்டி வீணாக்குகின்றார்கள். இவர்கள் வரிப் பணத்தையும், வெளிநாடுகளில் கடன்களாக வாங்கிய பணத்தையும் திட்டங்கள் பெயராலும் வேறு வகையாலும் பாழாக்கும் கொடுமை இங்கிருந்து பார்ப்பவருக்குப் புரியாது. டில்லிக்குச் சென்று ஒரு வாரம் தங்கி ஊன்றிக் கவனித்தால் நன்கு புரியும். முற்காலத்தில் ஆடம்பர வாழ்வில் புரண்டு சிறந்திருந்த மொகலாயமன்னர்கள், இப்போது டில்லியிலுள்ள காங்கிரசு மொகலாயர்களிடம் பிச்சை வாங்கவேண்டியதுதான்.

மூன்று மாதங்கட்கு முன்னர் இதே ஊரில் நம் செல்வம் எப்படி எடுத்து வெளியில் அனுப்பப்படுகின்றதென்பதைச் சொன்னேன். அதனையே இப்போது திருப்பிச் சொல்லுகின்றேன். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் ஆல்வீலர் கைப் பம்பினைக் கொண்டு இந்தியாவென்னும் கிணற்றிலிருந்து நம்

ரத்தத்தை எடுத்து ஒரு இங்கிலாந்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது ஆளும் அரசாங்கத்தார் கை பம்பைச் சிறிதென்று விட்டு விட்டு தண்டபாணி பம்பு, P. S. G. பம்பு போன்ற பெரிய பம்புகளால் நம்நாட்டின் இரத்தத்தை உறிஞ்சிப் பல வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் இப்போது மேற்கொண்டுள்ள வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு உதவி, வெளிநாட்டுப் பிச்சை, வெளிநாட்டுக் கூட்டு வாணிகம், வெளிநாட்டு ஒத்துழைப்பு என்பன போன்ற வகைகளில் விரயமாகும் பணத்தை எண்ணினால் அந்தப் பம்புகளும்கூட உறிஞ்சும் சக்தி குறைந்துவிட்டதால் நெய்வேலியில் அமைக்கப்பட்டுள்ள Jet பம்புகள் வைத்து நம் ரத்தத்தை உறிஞ்சிப் பல வெளிநாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது.

இங்குச் செய்து வரும் கொடுமைகளால் நமது தலைவர் ராசாசிபோன்றவர்கள் காங்கிரசு ஒழியவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். நானும் சில வாரங்களுக்கு முன்னர்க் காங்கிரசு ஆட்சிமாற வேண்டுமென்று தீர்மானங்கள் செய்து அனுப்புவதால் ஒரு பயனும் இல்லையென்றும், எல்லாப் பொதுமக்களையும் நாணயமில்லாதவர்களாகச் செய்து கொண்டிருக்கும் அரசாங்கத்தை மாற்ற வேண்டுமென்றும் சொன்னேன். இன்றும் இங்குக் கூடியிருக்கும் தலைவர்கள் செய்யும் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்காது தள்ளிவிடுமானால், அந்த அரசாங்கத்தை மாற்றவேண்டியது தானென்று இன்றும் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திச் சொல்லுகின்றேன். காங்கிரசு ஒழிந்தால்

இப்போது கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வருமோ என்று எண்ண இடமுண்டு. அதனை மக்கள் விரும்ப வில்லை. நாம் காங்கிரசையே நம்பவேண்டியிருக்கிறது. காங்கிரசு அரசாங்கம் இந்த நாட்டில் தொடர்ந்து இருக்கவேண்டுமானால் இந்தி மொழியைப் பொது மொழியாகவோ ஆட்சி மொழியாகவோ ஆக்குவதை நிறுத்திவிட வேண்டும்.

காங்கிரசு ஆட்சிக்கு வந்த பிறகு பல நன்மை களுக்கான காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. உணவு தானியங்கள் பெருமளவில் உற்பத்தியாகா விட்டாலும், பெரிய அணைக்கட்டுகளும், உர உற் பத்திசாலைகளும், தொழில் வளத்திற்கான உருக் காலைகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்திய நாட்டிலுள்ள சிறு சிறு வட்டாரங்களின் வளர்ச்சிக் கான செயல்முறைகளும் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. மதிய உணவளித்து நம் நாட்டு வசதியற்ற பிள்ளைகள் கற்க வாய்ப்பளித்துள்ளனர். இவை யெல்லாம் உண்மையே. சாதாரண சனங்களால் சாதிக்கக்கூடியதில்லை. இவற்றுக்கெல்லாம் ஆகிய அல்லது ஆகும் செலவினங்களை நோக்கினால், விளைந்த பயன்கள் மிகக் குறைவு என்பதும் வீண் செலவுகள் தான் அதிகம் என்பதும் தெரியும். கத்தி தங்கத் தால் செய்யப்பெற்றது என்பதற்காகக் கழுத்தை அறுத்துக் கொள்ள முடியுமா ? திட்டங்கள் போட் டுக் காட்டுகின்றார்கள் என்பதற்காக இப்போதுள்ள அரசாங்கத்தாரின் ஊழல் மலிந்த போக்கை அப் படியே நாம் ஆதரிக்க முடியுமா ? அப்படியே ஆதரித் தாலும், அது நம் கழுத்தை நாமே அறுத்துக் கொள் ளுவதற்கு ஒப்பாகும்.

ஒரு சிலருடைய வெறுப்புக்காக ஆங்கிலம் வேண்டாம் என்று சொன்னால் ஒவ்வொரு மாநில மொழிக்காகவும் மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக் கொள்ளவேண்டியது. அந்தந்த வட்டார மொழி களில் எல்லாக் காரியங்களும் நடைபெறவிட வேண் டும். மத்திய அரசாங்கத்தின் வசதிக்காக, வேண்டு மென்றால் ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம். உணவுப் பண்டங்கள் மீதுள்ள கட்டுப்பாட்டையும் வரிகளையும் நீக்கிவிடவேண்டும். அரசாங்கத்தார் நியமிக்கும் கட்டுப்பாடும் வரித்தொல்லைகளுமே, வியாபாரிகளெம், தொழிலதிபர்களையும் அரசாங்க ஊழியர்களையும் கறுப்புப் பண வியாபாரம், லஞ்சம் போன்ற குற்றங்களில் ஈடுபடச் செய்கின்றது.

ஆகவே மேற்காட்டிய குற்றங்களை விலக்கிக் கொண்டு நன்முறையில் நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்ற அறிவுரை கூறுவதற்காகவே இக் கூட்டம் கூட்டப் பெற்றுள்ளது. மத்திய அரசாங்கம் இப்போதுள்ளதுபோல மாநிலங்களின் எல்லா உரிமை களிலும் தலையிடாமல், வெளிநாட்டுத் தொடர்பு, பட்டாளம், ரயில்வே, தபால் போன்றவற்றை மத்திய அரசாங்கம் வைத்துக்கொண்டு, மற்றவற்றையெல் லாம் மாநில அரசாங்கத்தின் பொறுப்பில் விட்டு விடவேண்டும். அவ்வாறு விட்டுவிடாமல் எல்லா வற்றிலும் தலையிடுவதன் மூலம் இந்திய ஒற்றுமை யைக் கெடுப்பதற்கு அரசாங்கம் ஊக்கமளித்திருக் கின்றது. இப்போது இந்தி மொழி பற்றி மத்திய அரசாங்கம் சனவரி 26-ஆம் நாள் முதல் அரசாங்க மொழியாகுமெனச் செய்துள்ள முடிவால் அரை குறையாகவிருந்த இந்திய ஒற்றுமை குலைவிற்கான சூழ்நிலை முழு உருவைப் பெறுகின்றது என்று சொல்லவேண்டியுளதென்று சொல்லி உங்களெல்லோ ரையும் வரவேற்கின்றேன்.

மேலும் சில குறிப்புகள் சொல்லி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

இன்று வெளியிட்டிருக்கும் 'ராணி' பொங்கல் மலரில் "ஹிந்தி கேலிக்கூத்து" என்ற தலைப்பில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் மிக விளக்கமாக சொல்லியிருக்கின்றார். அதில் குறிப்பிட்டபடி சீனப் பிரச்சினை, நேபாளப் பிரச்சினை, பூடான் பிரச்சினை, நாகலாந்து பிரச்சினை, பாகிஸ்தான் பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை, அமெரிக்கப் பிரச்சினை, ரஷியப் பிரச்சினை, கேரளப் பிரச்சினை, கோவாப்பிரச்சினை, பர்மா அகதிப் பிரச்சினை, இலங்கை நாடற்றோர் பிரச்சினை, அணுகுண்டுப் பிரச்சினை, ஐக்கிய நாட்டுப் பிரச்சினை, படைப் பிரச்சினை, போர்க்கருவிப் பிரச்சினை, ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சினை, கடன் திட்டப் பிரச்சினை, தொழில் பிரச்சினை, வணிகப் பிரச்சினை, விவசாயப் பிரச்சினை, பங்கீட்டுப் பிரச்சினை, குடும்பக் கட்டுப் பாட்டுப் பிரச்சினை, தங்கக் கட்டுப்பாட்டுப் பிரச்சினை, நோட்டு அடிக்கும் பிரச்சினை, விலை உயர்வுப் பிரச்சினை, அரிசிப் பிரச்சினை, இலஞ்சப் பிரச்சினை முதலிய இவ்வளவு பிரச்சினைகள் எல்லாம் தீர்க்க வேண்டியிருக்க, அவற்றை தீர்க்காமலும் இன்னும் பொதுமக்களின் பேரில் அதிக பாரம் சுமத்துவதற்கும் இந்த ஹிந்தி பிரச்சினையை அரசாங்கம் கொண்டு வருகிறது.

Dr. சுப்பராயன் முதலான அநேக தலைவர்கள் சொன்னபடி இந்தியாவை 5 பெரும் பிரிவுகளாக (Zone) தென்னிந்தியா, வட இந்தியா, மேற்கு இந்தியா, மத்திய இந்தியா, கிழக்கு இந்தியா என்று தனித்தனியாக அங்கங்கே உள்ள எல்லா பாஷைகளை

வைத்துக்கொண்டு அரசாங்க அலுவல்களிலும் அந்தந்தப் பிரிவு சுதந்திரமாக நடத்த ஏற்பாடுகள் செய்தாலொழிய, இப்பொழுதிருக்கின்ற அரசாங்கத்தால் எதையும் சரியாக நடத்தமுடியாது என்பது நாள்தோறும் நடக்கும் நிகழ்ச்சிகள் தெள்ளெனக் காட்டுகிறது.

எங்குமே தன் வருவாயைக் கொண்டு என்ன செய்யலாம், எதை முன்பு செய்யலாம், எதை பின்பு செய்யலாம் எனத் திட்டம் போடுவார்கள். ஆனல் நம் அரசாங்கம் கனவு காண்பதுபோல வெட்டு சுரைக்காய்களாய் படித்துத் திட்டம் வகுத்து, அதற்காக வெளியில் பிச்சை எடுத்து, வரும் பணத்தை எதிர் நோக்கி நமக்கு முதலில் அவசியம் இல்லாதவற்றை செய்து நம் செல்வத்தையும் வீணக்குகிருர்கள்.

இதைப்பற்றி 1960-ல் பம்பாயில் ஓரிடத்தில் இந்தத் திட்டங்கள் இந்தியாவிற்கே தீமைவிளைவித்து இதனுடைய நுனி வால் அளவுள்ள ஜப்பான், பாகிஸ்தான், பர்மா, இலங்கை முதலிய நாடுகளைவிட கீழ் நிலைக்கு போய்க்கொண்டிருக்கிறது என்றும் ஆகையால் இந்தத் திட்டம் போடும் இலாக்காவையே அழித்தாலொழிய இந்தியா முன்னுக்கு வராது என்றும் சொன்னேன். இதைக் கேட்ட நிபுணர்களில் ஒருவராவது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. நான் அன்று சொன்னபடியே இன்று நடந்து வந்திருக்கிறது. திட்டமிட்டவர்களே சொல்லுகின்ருர்கள், கடந்த திட்ட அனுபவத்தைக் கொண்டு 4-வது திட்டம் வரைகின்ருேம் என்று. இது எதைக் காட்டுகின்றது? திட்டமிடுபவர்கள் திட்டம் என்பதே ஒன்றும் தெரியாதவர்கள் என்பதைக் காட்டுகிறது.

முதல் திட்டத்தில் நம் ரூபாயின் மதிப்பு கால் பாகம் குறைந்தது. இரண்டாவது திட்டத்தில் அரை பாகம் குறைந்தது. மூன்றாவது திட்டத்தில் திட்டம் முடிவதற்கு முன்பே 17 பைசாவுக்கு வந்துவிட்டது என்று செய்தித் தாள்களில் படித்தேன். இது முடியும்பொழுதும், மூன்றாவது திட்டத்தைவிட மூன்று பாகம் பெரிதாகவுள்ள நான்காவது திட்டம் வரும்போதும் என்னவாகும் என்பதை நினைக்கவும் முடியாததாயிருக்கிறது. இதன் நடுவில் சென்னையை சீர்திருத்த ஒரு ஆயிரம் கோடிக்கு ஒரு திட்டமும், கோவையை சீர்திருத்த நாற்பது கோடிக்கு ஒரு திட்டமும் வந்திருக்கின்றன.

இதேபோல் மற்ற நகரங்களுக்கும் திட்டக் கமிஷனை காப்பியடிப்பவர்கள் திட்டங்கள் போடப் போகிறார்கள். இந்தத் திட்டங்களின் தொகை சேராமலேயே திட்டக் கமிஷன் 22,500 கோடியை வீணாக்கி தேசத்தையே அடிமைத்தனத்திற்குக் கொண்டு வருவதற்கு கனவு கண்டிருக்கிறார்கள். இதை மற்றெவரும் கண்டித்துச் சொல்ல பயப்படுகிறார்கள். இருந்தாலும் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜும் நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியும் வெளி வருவாயை நாடிக்கொண்டு இவ்வளவு பெரிய திட்டங்களை வகுக்கக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். நம் ராஜாஜி அவர்கள் கூட அநேக இடங்களில் பல முறை இவைகளைப்பற்றி விளக்கி இருக்கிறார்கள். ஆனால் நம் அரசாங்கம் இவர்கள் தென்னிந்தியர்கள், இவர்கள் சொல்லுவதைக் கேட்பதாவென்று குப்பைத் தொட்டியில்தான் போடுகிறார்கள்.

நாம் சுதந்திரம் அடைந்து காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகு நம் தேசத்திற்கு அநேக பெரிய காரியங்

களைச் செய்திருக்கிறார்கள் என்பதை மறுக்கவில்லை. இரும்புத் தொழிலில் மிகப் பெரிய ஸ்தாபனங்களும், சுரங்கத் தொழிலிலும் மிகப் பெரிய திட்டங்கள் வகுத்தும், ஸ்டீம் என்ஜின், டீசல் என்ஜின், எலக்டிரிக் என்ஜின், வாகன்கள், கப்பல்கள், பெரிய ஜெனரேட்டர்கள், டர்பைன்கள், டிரான்ஸ்பார்மர்கள், பாய்லர்கள் முதலியவை உற்பத்திக்கான மிகப் பெரிய திட்டங்களையும் வகுத்திருக்கிறார்கள்.

இவைகளைத் தவிர, இயந்திரங்கள் Machine Tools, ரசாயன மிஷின்கள், Metallurgy, நூல் நூற்கும் மிஷின்கள், சிமெண்டு, காகிதம், சர்க்கரை மிஷின்கள், தண்ணீர் இறைக்கும் பம்புகள், டிராக்டர்கள், ரசாயன விவசாய எருக்கள், சைக்கிள், மோட்டார் சைக்கிள், மோட்டார் கார்கள், மின்சார விசிறிகள், பெட்ரோல் சுத்திகரிக்கும் தொழில்கள், மருந்துகள், ஏர் கண்டிஷன் மிஷின்கள், ரிபிஜிரேட்டர்கள், கடிகாரங்கள், முகப் பவுடர்கள், பவுண்டன் பேனுக்கள் இன்னும் பல தொழில்களையும், விருத்தி செய்திருக்கிறார்கள். இதில் அநேகம் தொழில்கள் மற்ற நாடுகளின் கூட்டு முயற்சியோடு (collaboration) நடத்த ஒப்புக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவையன்றி தொழில்களுக்கு வேண்டிய மின்சார விசை உற்பத்திக்கும், விவசாயத்திற்கும் வேண்டிய அநேக அணைக்கட்டுகளையும், அநேக கால்வாய்களையும் கட்டியிருக்கிறார்கள். இவற்றில் பலதரப்பட்டவற்றை யாருமே பாராட்டக்கூடிய வகையில் அவ்வளவு பெரியதாகவும், ஒழுங்காகவும் செய்துதானிருக்கிறார்கள்.

இதேமாதிரி கல்வியையும் மிகப் பெரிய திட்டங்களை ஏற்படுத்தி செய்திருக்கிறார்கள். உயர்நிலைப்

பள்ளிகளிலும் மற்ற கல்லூரிகளிலும் தொழில்கல்வி நிலையங்களிலும் முன்பு இருந்த எண்ணிக்கையைவிட 10 மடங்கு 20 மடங்கு இளம்வயதினர் கல்வி கற்க ஏராளமான தொகைகளை செலவு செய்து ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

தவிர, அநேக ஆஸ்பத்திரிகளும், ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய மருந்துகள் செய்யும் ஆலைகளும் தோற்றுவித்திருக்கிறார்கள். தொழில்களிலும் மிகப் பெரிய தொழில்களுக்கும், மிகச் சிறிய தொழில்களுக்கும் ஏராளமான கடனுதவி செய்யவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இவற்றை எல்லாம் பாராட்டக்கூடியவை என்பதில் சந்தேகமில்லை. வேறு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்திருந்தாலும் இவ்வளவு செய்திருக்க முடியாதென்பதை ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். ஆனால் முதலில் செய்யவேண்டிய விவசாய அபிவிருத்தியையும், உயர்ந்துகொண்டே போகும் ஜனத்தொகைக்கு வேண்டிய தொழில் அபிவிருத்தியையும் இந்த அரசாங்கத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இதற்கு மாறுபாடாக லஞ்ச ஊழல்களும் கள்ள மார்க்கெட்டுகளும் இன்னும் மற்ற ஊழல்களும் மிக அதிகமாக உண்டாகி இருக்கின்றன. இவற்றைப் பற்றி அநேக இடங்களில் அநேக கட்சிகள் கூட்டங்கள்கூட்டி தீர்மானங்கள் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றிக்கு 100-க்கு 90 பாகம் குப்பைத் தொட்டிக்குத்தான் போகின்றன.

அவைகள் ஏன் குப்பைத்தொட்டிக்குப் போகின்றன. அரசாங்கத்திற்கு என்ன செய்யவேண்டு

மென்று அறிந்துகொள்ளும் சக்தியின்மையாலா? அல்லது அவைகளைத் தெரிந்துகொண்டே இங்கு இருப்பவர்கள் மேலிருக்கும் வெறுப்பினாலா? அல லது இவையன்றி அரசாங்கத்தால் எதையும் செய்ய சக்தி இல்லை என்பதாலா?

ஆகையால், எந்தத் தீர்மானங்கள் செய்து அனுப்பியும் ஒரு பலனுமில்லை என்பது எல்லோருக் கும் தெரியும். இருந்தாலும் இந்த இந்தி மொழி அமுலுக்குவரும் விஷயத்தை எதிர்த்து இங்கு செய் யப்படும் தீர்மானங்களை அனுப்புவோம். இவைகளை அரசாங்கம் எற்றுக்கொள்ளும் பட்சத்தில் இங்குள்ள எல்லாக் கட்சியினரும் அரசாங்கத்தோடு ஒத்து ழைத்து சீனா, பாகிஸ்தான் மற்ற எந்த நாட்டினர் செய்யும் அடாத செய்கைகளை ஒழித்துக்கட்டுவோம்.

ஆனால், இன்றைய தினம் இந்த அரசாங்கம் புறை மூடிக்கொண்டிருக்கும் கண்களை திறந்து இதை பார்க்குமா என்பது சந்தேகம்.

வழக்கம்போல் இதையும் குப்பைத்தொட்டியில் போடும் பட்சத்தில் அடுத்த கூட்டம் கூட்டி அந்தக் கூட்டத்தில் எவ்வாறு 22,500 கோடி திட்டம் இந்தி யாவைத் தாக்குகின்றது. எவ்வாறு 3000 கோடிக் கும் மேற்பட்ட கடன்கள் நம்மை உறிஞ்சுகிறது, எவ்விதம் வெளிநாட்டு கூட்டு ஒப்பந்தங்களினால் (Foreign collaboration) எற்படும் தொழில்களில் ஆடையை சாப்பிட்டுவிட்டு மோர் மட்டும் நமக்கு எப்படிக் கொடுக்கின்றது, 100 ரூபாய் நோட்டுகளை செல்லாது என்று செய்தால் எவ்விதம் காங்கிரஸ் எலெக்ஷனில் தோற்கும் என்பதும், ஏன் லஞ்ச ஊழல்களை அடக்க முடியவில்லை என்பது

பற்றியும், ஒரு வார காலத்தில் ஒழிக்கக் கூடிய கள்ளக் கணக்குகளை ஏன் விட்டுவைத்து இருக்கிறார்கள் என்பதையும் எதற்காக கதர் வியாபாரம் ஓட்டிக்கொண்டிருக்கிறது, முன்பு விசைத் தரிகள் வைக்கக்கூடாது என்று நிறுத்தி இப்போது எதற்காக அனுமதி கொடுக்கிறார்கள் என்றும் இப்போது $1\frac{1}{2}$ கோடி வேலையில்லாதவர்களை 3 அல்லது 4 கோடி வேலையில்லாதவர்களாக ஆக்குவது என்பதையும், இப்போது இருக்கும் 320 வேலை தேடித்தரும் நிறுவனங்களுக்குப் பதில் 4-வது திட்டத்தில் 1000 வேலை தேடித்தரும் நிறுவனங்கள் எதற்காக என்பதையும், காலணா அல்லது அரையணா விலையுள்ள மருந்துகளுக்கு எவ்வாறு ஒரு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் செலவு செய்கிறார்கள் என்பதையும், எவ்விதம் நம் இளைஞர்களை கல்வி என்னும் போர்வைக்குள் செலுத்தி உதவாக்கரை ஆக்குகிறார்கள் என்பதும் வட்டார அபிவிருத்தி இலாக்கா (Block Development) அம்பர் சர்க்கா, ஆதாரப்பள்ளிகள், கோவாபரேடிவ் சொசைடிகள், பஞ்சாயத்துகள் எதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, இவைகளெல்லாம் காங்கிரஸ் கட்சிக்கு எப்படி உதவி செய்கின்றன, என்பவைப்பற்றி பொது மக்களுக்கு தெரிவிப்போம்.

திரு. பெரியார் ஈ. வெ. ராமசாமி ஒரு தடவை சொன்னார். வரி போடாமலேயே அரசாங்கம் நடத்தலாமென்று. ஆனால் நம் அரசாங்கம் மூச்சு விடும் காற்றைத் தவிர்த்து மற்றெல்லாவற்றிற்கும் வரி போட்டிருக்கிறார்கள். அந்த வரிப்பணத்தை அவர்கள் சொல்லுகிறபடி பொது மக்கள் நன்மைக்கு செலவு செய்வதற்குப் பதில் எவ்வாறு டில்லியிலும், மற்ற இடங்களிலும், மற்ற தேசங்களிலும், மோக

லாய ராஜாக்கள் இருந்ததைவிட பன்மடங்கு ஆடம்பரமாக செல்வத்தை வீணாக்கி விரயமாக்குகிறார்கள் என்பதையும், நம் நாட்டில் இவற்றைப்பற்றி அறியாதிருக்கும் 100-க்கு 90 பேருக்கும் எடுத்துக் கூறுவோம். அதன்பேரில் எது நடந்தாலும் நடக்கட்டும் என்று விடுவோம்.

இவைகள் எலலாவற்றையும் பற்றி ஆராய்ந்து ஒரு தீர்மானம் செய்வதற்கு வந்திருக்கும் அனைவரையும் மீண்டும் மனமார வரவேற்கின்றேன்.